ஆசிரியர் தேர்வு வாரியம்

அறிவிக்கை எண் : 02A/2026 நாள்: 05.11.2026

ADDENDUM

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வாயிலாக தமிழ்நாட்டில் அரசு / அரசு உதவி பெறும் / தனியார் பள்ளிகளில் தற்போது பணிபுரிந்து வருகின்ற ஆசிரியர்களுக்கான இரண்டாம் கட்ட (SPECIAL TNTET – 2) தமிழ்நாடு ஆசிரியர் தகுதித்தேர்வு – அக்டோபர் 2026 அறிவிக்கை எண்.02/2026 இவ்வாரிய இணையதளத்தில் 26.10.2026 அன்று வெளியிடப்பட்டது.

இந்நிலையில், புதுச்சேரி அரசு, பள்ளிக்கல்வித் துறை செயலரின் நேர்முக கடித எண்.M-17076 (76) / 33 / 2026- Academic Wing - JD/DSE, நாள்.30.10.2026இல் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்குட்பட்ட அரசு/அரசு உதவி பெறும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளில் பணிபுரிந்து வருகின்ற ஆசிரியர்களுக்கு மேற்படி நடைபெறவுள்ள தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு - அக்டோபர் 2026 இல் பங்கேற்க அனுமதி கோரப்பட்டது.

இதனடிப்படையில், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்குட்பட்ட அரசு/அரசு உதவி பெறும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளில் 01.09.2025க்கு முன்னர் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டு தற்போது தொடர்ந்து பணிபுரிந்து வருகின்ற தகுதி வாய்ந்த ஆசிரியர்களுக்கு மட்டும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அறிவிக்கையின்படி நடைபெற உள்ள தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு - அக்டோபர் 2026 தாள்-I மற்றும் தாள்-IIற்கு இவ்வாரிய இணையதளத்தில் (www.trb.tn.gov.in) விண்ணப்பிக்க **05.11.2026** முதல் **19.11.2026** வரை கால அவகாசம் வழங்கப்படுகிறது. இத்தகுதித் தேர்வு சார்ந்த கூடுதல் விவரங்கள் மேற்கண்ட அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், புதுச்சேரி அரசு, பள்ளிக் கல்வித்துறை செயலரின் நேர்முக கடித எண்.M-17076 (76)/33/2026-AcademicWing-JD/DSE, நாள்.30.10.2026இன்படி, புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்குட்பட்ட பள்ளிகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள் இவ்வாரியத்தால் நடத்தப்படும் சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வில் பங்கேற்கவும், தேர்வில் அவர்கள் பெறும் மதிப்பெண்கள் புதுச்சேரி அரசிற்கு வழங்கவும் கோரப்பட்டுள்ளதன் அடிப்படையில், இவ்வறிவிக்கை எண் 02A/2026, 05.11.2026 அன்று வெளியிடப்படுகிறது.

ஆசிரியர் தேர்வு வாரியம்